# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2016

## வரலாறு

2935

**தரம்: 06**

சுட்டெண் :.........................................

**நேரம்: 2.00 மணித்தியாலம்**

### பகுதி - I

❖ **பொருத்தமான விடையின்கீழ் கோடிடுக.**

01) வரலாற்றின் தந்தை என அழைக்கப்படுபவர்.

1) ஹெரடோரஸ் 2) ஈ.எச்.கார்
3) ஸ்டுவட் பிகொட் 4) அரிஸ்ரோட்டில்

02) மகாவம்சத்தை எழுதியவர்.

1) குப்பிக்கல திஸ்ஸ தேரர் 2) மகாநாமதேரர்.
3) மீகொற்டுவத்த குணவர்த்தன 4) ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கலதேரர்

03) பாதங்கள் பலவற்றைக் கொண்ட மரஅட்டை போன்ற உயிரினங்கள் தரையில் தோன்றிய யுகம்.

1) பெலியொசொயிக்யுகம் 2) சிலூரியன் யுகம்
3) பெரும்பனியுகம் 4) கேம்பிரியன்யுகம்

04) கி.பி 4ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலங்கை வரலாற்றைக் கூறும் நூல்.

1) மகாவம்சம் 2) பூஜாவலிய 3) சூளவம்சம் 4) மகாவம்சம்

05) மின்னேரியாக குளத்தைக் கட்டுவித்த மன்னன்.

1) பண்டுகாபயன் 2) வசபன் 3) மகாசேனன் 4) தாதுசேனன்

06) சாலிவாகன சகாப்த முறைமூலம் காலத்தை அளவிடுபவர்கள்

1) இந்துக்கள் 2) கிறிஸ்தவர்கள் 3) இஸ்லாமியர் 4) பௌத்தர்கள்

07) பௌத்த வருடம் கணிக்கப்படுவது

1) புத்தர் பிறப்பில் இருந்து
2) புத்தர் பரிநிர்மாணம் அடைந்ததிலிருந்து
3) புத்தர் 1ம் முறை இலங்கைக்கு வருகை தந்ததில் இருந்து
4) மகிந்ததேரர் இலங்கைக்கு வருகை தந்ததில் இருந்து

08) நாம் வாழும் கோள்

1) புதன் 2) வியாழன் 3) புவி 4) யுரேனஸ்



kalvi.lk

09) ஒஸ்ரிலொயிட் இன மக்கள் வாழும் நாடு

1) சீனா 2) ரஷ்யா 3) ஐக்கிய அமெரிக்கா 4) இந்தியா

10) ஒபபீனியாவின் பாறைப்படிவு கண்டுபிடிக்கப்பட்ட இடம்.

1) பிரித்தானியா 2) கனடா 3) ஜேர்மனி 4) ஐக்கிய அமெரிக்கா

11) பொலநறுவைக் கல் விகாரையைக் கட்டிய மன்னன்.

1) 1ம் பராக்கிரமபாகு 2) 1ம் விஜயபாகு

3) நிஸ்ஸங்கமல்லன் 4) 2ம் விஜயபாகு

12) வானரம் தன் நிலையிலிருந்து மனிதனது நிலையை அடைந்தபின் பெற்ற பெயர்.

1) ஓபபீனியா 2) [illegible]ரிகா 3) ஒஸ்ரலோபிதிகஸ் 4) நெபியுலா

13) கல்லாயுத காலத்தில் இடம்பெற்ற முக்கிய சம்பவம்.

1) உணவைச் சுடப்பழகியமை 2) நெருப்பைக் கண்டுபிடித்தமை.

3) நாடோடி வாழ்க்கை 4) பயிர்செய்தமை.

14) முதன் முதலாக நெருப்பைக் கண்டு பிடித்துப் பயன்படுத்திய மனித இனம்.

1) ஹோமோ இரெக்டஸ் 2) ஹோமோ ஹெபிலஸ்

3) ஹோமோ நியண்டதாலன்சிஸ் 4) ஹோமோ சேப்பியன்ஸ்

15) நெற்செய்கை முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட நாடு.

1) மெக்சிக்கோ 2) யப்பான் 3) இந்தியா 4) சீனா

16) மனிதன் வீடு அமைந்து வசிப்பதற்கு தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டயுகம்.

1) வேடுவர் யுகம் 2) இடையர் யுகம்

3) விவசாயயுகம் 4) நாடோடியுகம்

17) உலோகம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் விசவாயத்திற்குத் தேவையான அரிவாள் களிமண்ணினால் செய்யப்பட்டுள்ளது. இந்த அரிவாள் கண்டுபிடிக்கப்பட்ட நாடு

1) இஸ்ரேல் 2) சீனா 3) இந்தியா 4) இலங்கை

18) மனிதனின் முக அமைவுகள் தோற்றங்கள் வேறுபடுவதற்குப் பிரதான காரணம்.

1) பிறப்பு 2) சூழல் 3) பழக்கவழக்கம் 4) கலாசாரம்

19) மத்திய தரைக்கடலில் பயிர் செய்யப்பட்ட தானியம்.

1) அரிசி 2) சோளம் 3) சாமை 4) கோதுமை

20) தற்போது வாழும் மனித இனம்

1) ஹோமோ சேபியன் 2) ஹோமோ இரெக்டஸ்

3) ஹோமோ நியண்டதாலன்சிஸ் 4) ஹோமோஹபிலிஸ்

(20x2=40புள்ளிகள்)



Education கல்வி kalvi.lk

## பகுதி - II

❖ **முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களிற்கு விடை தருக.**

(01) அ. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. முதலாந் தவணையில் வரலாற்றுப் பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகைகள் 02 தருக?

(2புள்ளி)


2. இக்கணிப்பீட்டிற்கு நீர் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் 02 தருக?

(2புள்ளி)

3. நீர் மேற்கொண்ட கணிப்பீட்டின் மூலம் பெற்ற நன்மைகள் 02 தருக?

(2புள்ளி)

ஆ.




மேலே காட்டப்பட்டுள்ள படத்தில் A,B,C,D,E,F ஆகிய எழுத்துக்களால் குறிப்பிடப்படும் இடங்களை அதே ஒழுங்கில் பெயரிடுக.

(01x6=06புள்ளிகள்)

(02) 1. வரலாறு என்பது யாது?

(4புள்ளிகள்)

2. வரலாறு பற்றி கருத்து கூறியவர்கள் இருவரைக் குறிப்பிடுக.

(4புள்ளிகள்)

3. வரலாறு கற்பதன் மூலம் பெற்றுக் கொள்ளும் பயன்கள் 02 தருக.

(4புள்ளிகள்)


kalvi.lk

(03) 1. பாடசாலை வரலாற்றை அறிய உதவும் ஆதாரங்கள் 02 தருக?

(4புள்ளிகள்)

2. வரலாற்று மூலாதாரங்களின் பிரதான இருவகைகளும் எவை?

(4புள்ளிகள்)

3. "கீழைத்தேசங்களின் தானியக் களஞ்சியம்" என இலங்கை அழைக்கப்படக் காரணங்கள் 2 தருக.

(4புள்ளிகள்)

(04) 1. இலக்கிய மூலாதாரங்கள் 02 தருக.

(4புள்ளிகள்)

2. தொல்பொருள் மூலாதாரங்கள் 02 தருக?

(4புள்ளிகள்)

3. பின்வருவனவற்றை இலக்கிய மூலாதாரம் தொல்பொருள் மூலாதாரம் என வகைப்படுத்துக. தீபவம்சம், சந்திரவட்டக்கல், வட்டதாகே, நாணயங்கள், பதுளை தூண்கல்வெட்டு, எலும்புக்கூடுகள், போதிவம்சம், கர்ணபரம்பரைக் கதைகள்

(4புள்ளிகள்)

(05) 1. பூமி தோன்றிய தூசிப்படலம் அழைக்கப்படும் பெயர்

(4புள்ளிகள்)

2. ஒப்பீனியா என்ற உயிரினத்தின் அமைப்புக்களின் தன்மைகள் 02 தருக.

(4புள்ளிகள்)

3. ஏனைய விலங்குகளைவிட மனிதனை முன்னிலைப்படுத்திக் காட்டும் செயல்கள் 02 தருக.

(4புள்ளிகள்)

06. 1. சிம்பன்சியிலிருந்து மனிதன் முன்னேறிய காலம் அழைக்கப்படுகின்ற பெயர்

(4புள்ளிகள்)

2. மனிதன் நெருப்பைக் கண்டுபிடித்தமையால் அடைந்த அநுகூலங்கள் 02 தருக?

(4புள்ளிகள்)

3. கல்லாயுத தன்மைக்கு அமைய மனிதன் கலாசார வளர்ச்சியின் மூன்று முக்கிய கட்டங்களில் இரண்டினைக் குறிப்பிடுக?

(4புள்ளிகள்)

07. 1. புதிய கற்காலத்தில் நடைபெற்ற இரு முக்கிய நிகழ்வுகள் எவை?

(4புள்ளிகள்)

2. ஆரம்ப காலங்களில் கட்டப்பட்ட வீடுகளின் இயல்புகள் 02 தருக.

(4புள்ளிகள்)

3. மனிதனின் மண்டையோட்டு அமைப்பிற்கேற்ப உருவாக்கப்பட்ட மனித தோற்றங்களின் வகைகள் 02 தருக.

(4புள்ளிகள்)



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

# GRADE 6,7,8

# STUDY WITH US..! MATHS ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.



| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page